பக்கங்கள் 8

ஈழநாடு The EELANAADU

50 சதம்

மலர் 22 யாழ்ப்பாணம் | சித்திரை 16 | ஜ. ஆகிர் 12 திங்கட்கிழமை | இதழ் 78 28-4-80

# அண்ணா தி.மு.க.-கம்யூ.கட்சி தேர்தல் உடன்பாடு

(சென்னை

அ இ அ தி மு கழகமும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியும் நேற்று தொகுதி உடன்பாடு செய்து கொண்டன.

புதிய உடன்பாட்டின்படி இணங்க இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் தலா பதினாறு தொகுதிகளில் போட்டியிடும். மிகுதியானவற்றில் அ இ அ. மு கழகம் போட்டியிடும் இடங்களைத் தெரிவு செய்வதுசம்பந்தமான பேச்சுக்கள் விரைவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

# பணயக் கைதிகள்

தெஹ்ரான், ஏப்ரல் 27

அமெரிக்க பணயக்கைதிகள் அனைவரும் வெவ்வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்தப் பட்டுள்ளனர் என்று புரட்சி மாணவர் ஒருவர் அறிவித்துள்ளார்.

பணயக்கைதிகளை மீட்கும் முயற்சியில் அமெரிக்கா மீண்டும் ஈடுபடுவதைத் தடுக்கும் வகையிலேயே பணயக்கைதிகள் மாற்றப்பட்டுள்ளனராம்.

கைதிகள் தடுத்துவைக்கப் பட்டிருக்கும் கட்டிடங்களை புரட்சிவாத காவல்படை வீரர்கள் காவல்செய்துவருவதாக தெஹ்ரான் வானொலி அறிவித்தது.

## ★ "பூரண விடுதலை இயக்கமாக மாறவேண்டும்"

# தமிழர் கூட்டணிக்கு பேரவை காலக்கெடு!

# 'அரசுமீதுநம்பிக்கை இல்லை தீர்மானம் வேண்டும்"

## தமிழீழ விடுதலைஇயக்கமாக செயல்பட பேரவை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக்கூட்டணி, தன்னை ஒரு பூரணமான விடுதலை இயக்கமாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும், இதற்காக தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு ஜூன்மாதம் 30 ம்திகதி வரை அவகாசம் அளிப்பதென்றும், இது நடைபெறாத பட்சத்தில், ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் தமிழ் இளைஞர் பேரவை, தமிழ்ஈழ விடுதலை இயக்கமாக தன்னைத்தானே பிரகடனப்படுத்திக்கொள்ளும் என்றும் தமிழ் இளைஞர் பேரவையின் பொதுச்சபை நேற்று ஒருமனதாகத் தீர்மானித்தது.

தமிழ்மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்னைகளையும் முன்வைத்து, இந்த அவசர- அவசிய பிரச்னைகள் இன்னும் தீர்க்கப்படாததைக் காரணம் காட்டி, அரசாங்கத்தின் மீது தமிழர் விடுதலைக் கூட்டணி நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை விரைவில் கொண்டுவரவேண்டும் என்று கோரும் தீர்மானமும் நேற்றைய இளைஞர் பேரவைப் பொதுச் சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

இளைஞர் பேரவையின் செயற்குழுக்கூட்டம் நேற்றுக் காலையும், பொதுச்சபைக் கூட்டம் பிற்பகலிலும் நடைபெற்றன. கூட்டத்திற்கு திரு. வாசுதேவா தலைமைவகித்தார்.

### 'மாவை'நிலை

நேற்றைய கூட்டத்தில் திரு. மாவை சேனாதிராசாவும் கலந்துகொண்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து திரு. மாவை சேனாதிராசா ராஜினாமாச் செய்த விவகாரம் நேற்றைய கூட்டத்தில் ஓரளவு முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டது. பேரவையின் முன் அனுமதி பெறாமல் ராஜினாமா செய்ததற்கு பல உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்துக் கொண்டனர்.

ஆனாலும், தமது ராஜினாமாவுக்கான காரணங்களை அவர் விளக்கிக் கூறியதைத் தொடர்ந்து "பதற்றம்" ஓரளவு தணிந்தது. இதனைத் தொடர்ந்து பேரவையின் முன்அனுமதி பெறாமல் ராஜினாமாசெய்து கொண்டது பற்றி திரு. மாவைசேனாதிராசா வருத்தம் தெரிவித்துக் கொண்டதும் பொதுச்சபை அதை முழு மனதுடன் வரவேற்று, தமிழர் விடுதலைக்கூட்டணியிலிருந்து மாவைசேனாதிராஜா ராஜினாமா செய்துகொண்டதை எதிர்ப்புகளின்றி ஏற்றுக் கொண்டது.

### 40 உறுப்பினர்கள்

நேற்று பிற்பகல் நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்துக்கு நாற்பதுக்கும் அதிகமான உறுப்பினர்கள் சமூகமளித்திருந்தனர்.

### சில தீர்மானம் வருமாறு

செயற்குழுவால் நிறைவேற்றப்பட்டு பின்னர் பொதுச் சபையினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு:

● "தமிழர் விடுதலைக் கூட்டணி தன்னை ஒரு பூரணமான விடுதலை இயக்கமாக மாற்றிக் கொள்ளவேண்டும். இதற்கான காலக்கெடு இவ்வருடம் ஜூன் மாதம் 30-ம் திகதி.

● கூட்டணி இதனை நிறைவேற்றாத பட்சத்தில், ஜூலை மாதம் முதல்

(8-ம் பக்கம் பார்க்க)

# ஐ தே.க. அமைப்பாளர் கொலைமுயற்சி

## சந்தேக நபர்கள் இருவரும் பிணையில் செல்ல அனுமதி

(புலோலி)

வடபிரதேச ஐக்கிய தேசியக் கட்சி பிரதம அமைப்பாளர் திரு. கே கணேசலிங்கம் கொலை முயற்சி தொடர்பான சந்தேக நபர்கள் இருவரும் தலா 10 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களான வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எஸ். குமரர், ரீ.விஜயசிங்கம் ஆகிய இருவரும் நேற்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிபதி திரு. கே எஸ் மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது இவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவ் வழக்கை விசாரணை செய்ய நீண்டநாட்கள் எடுக்கும் என்று கருதுவதனாலேயே சந்தேக நபர்களை பிணையில் செல்ல அனுமதிப்பதாகவும், பிணையில் இருக்கும் காலங்களில் அவர்கள் சமூக விரோத செயல்களில் ஈடுபடக்கூடாது என்று எச்சரித்த நீதிபதி விசாரணையை மே மாதம் 26ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (இ)

# "அறிவு, ஆற்றலை இனத்திற்கு அர்ப்பணித்தார்"

## அமரர் 'திரு'வுக்கு புகழ்மாலை

(யாழ்ப்பாணம்)

"தமிழினத்தில் அறிவு, ஆற்றல், திறமை முதலியன படைத்தவர்கள் நிறையப் பேர் உண்டு. உலகில் பல நாடுகளில் பரந்துசென்று தமது அறிவினால் தமக்குத் தனியான இடத்தை நிலைநாட்டியவர்கள் உண்டு. அந்த அறிவு, ஆற்றலை இனத்திற்காக தாழ்வுற்று தத்தளிக்கும் தமிழ்பேசும் மக்களுக்காக உழைத்தவர்கள், உழைக்க ஆவல் கொண்டவர்கள் மிகச்சிலர். அந்த ஒருசிலரில் சிறந்த அறிவு, ஆற்றலை தமிழ் இனத்திற்கு அர்ப்பணித்த முன்னணித் தொண்டரான அமரர் திருச்செல்வம் விளங்கினர்.

யாழ். முனீஸ்வரன் சந்தியில் அமரர் மு திருச்செல்வத்தின் உருவச்சிலையை திறந்து வைத்துப் பேசிய எதிர்க் கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் நடந்த இவ் விழாவில் அமரர் திருச்செல்வத்தின் புதல்வர் சலாநிதி நீலன் திருச்செல்வம் கலந்து கொண்டார். கூட்டணி எம்.பிக்கள், யாழ் நகர பிதாக்கள், மாநகர சபை ஆணையாளர் திரு. கே.

(8-ம் பக்கம் பார்க்க)

# 'தமிழ் இன ஒற்றுமையே தமிழீழத்திற்கு வித்திட்டது"

-- கோப்பாய் எம். பி.

## தனிநாயக அடிகளாருக்கு பாராட்டு

[யாழ்ப்பாணம்]

"தமிழ்மக்கள் மதத்தால் வேறுபட்டாலும் மொழியால், பண்பாட்டால், அடிப்படை ஆன்மீகத்தால் ஒன்றுபட்டவர்கள் அந்த ஒற்றுமைதான் தமிழ் ஈழத்திற்கு வித்திட்டுள்ளது"

யாழ் மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற வணபிதா எஸ். தனிநாயகம் அடிகளாருக்கு அளிக்கப்பட்ட பாராட்டுவிழாவில் பேசிய கோப்பாய் எம் பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மாநகரசபையால் நடாத்தப்பட்ட இப்பாராட்டு விழா யாழ் மாநகர முதல்வர் திரு இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெற்றது. இவ் வைபவம் நடைபெறுவதற்கு முன்னர் அடிகளார் மேளவாத்தியசகிதம் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்.

யாழ்நகர முதல்வர் பாராட்டுப்பத்திரமொன்றை வாசித்து வெள்ளிப்பேழையில் வைத்து அடிகளாருக்கு வழங்கினர்.

திரு. கதிரவேலுப்பிள்ளை தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

[illegible] ஆராய்ச்சிக்குமாக அரும் தொண்டாற்றினர். அடிமைத் தளையில் கட்டப்பட்டிருக்கும் தமிழ்இனம் இப்படியான ஒரு தமிழ் அறிஞனுக்கு விழா எடுப்பது அடிமை விலங்கில் இருந்து விடுதலை பெற முன்வந்துவிட்டது என்பதையே எடுத்துக்காட்டுகிறது"

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது: "எமது நாட்டில் தோன்றிய பெரியார்கள் பலர் தமிழ் மொழியின் [illegible] எல்லாம் பரப்பினர் [illegible] சுவாமி ஞானப் [illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

## 36 பேர் பலி

(பாங்கொக்)

தாய்லாந்துக்கு அருகே விமானமொன்று விபத்துக்குள்ளானதில் 36பேர் பலியானார்கள். இந்த விமானத்தில் 45 பேர் இருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வரணி, சரபலபக்குறிச்சி, கதிர்காமர் வாசித்தம்பி
வழக்காளி

இல. ஈடு/5603/M. B

எதிராக

சாவகச்சேரி, சாவகச்சேரி தெற்கு,
முருகேசு பாலசிங்கமும் பெண் சாவித்திரிதேவியும்
எதிராளிகள்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில் ஈடு M. B/5603-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1980-ம் ஆண்டு மே (வைகாசி) மாதம் 12-ந் திகதி (12-5-80) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் முறையே அந்தந்த காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 6060/-ம், இதில் ரூபாய் 4000/-க்கு 29-1-79-ந் திகதி தொடக்கம் 18-7-79-ந் திகதி வரைக்கும் 100க்கு 24 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 632-85 சதம்.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று சாவகச்சேரி இறை "கெருடாவில்வயல்" நெற்பரப்பு 11½ம் எல்லை கிழக்கு சிதம்பரப்பிள்ளை பெண் முத்துப்பிள்ளையின் ஆதனம், வடக்கு தம்பிப்பிள்ளை பெண் சரஸ்வதிப்பிள்ளையின் ஆதனம், மேற்கு றோட்டு, தெற்கு சிதம்பரப்பிள்ளை பெண் ஆச்சிமுத்துவின் ஆதனம். இவ்வெல்லைக் காணியடங்கலும் இதைச்சேர்ந்தவைகளனைத்தும் செய்பயிர் வான்பயிர்களும் கட்டிடங்களும் முற்பதிவு F 212/184

2. மேற்படி இறை "கெருடாவில் வயல்" நெற்பரப்பு அரையும் எல்லை கிழக்கு றோட்டு, வடக்கு றோட்டும் கெருடாவில் சாவகச்சேரி கந்தசுவாமி கோவிலுக்குரிய ஆதனமும், மேற்கு கழிவு வாய்க்கால், தெற்கு சிதம்பரப்பிள்ளை பெண் ஆச்சிமுத்துவின் ஆதனம். இவ்வெல்லைக்காணியடங்கலும் இதைச்சேர்ந்தவைகளனைத்தும் செய்பயிர் வான்பயிர்களும் முற்பதிவு F 212/185.

**சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,**
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

தெல்லிப்பழை,
22-3-1980. 5592

## பிறந்த தின வாழ்த்து



யேசுநாயகம் ஆரோக்கிய றூபி

மாதகல் கனுல் வீதியைச் சேர்ந்த யேசுநாயகம் — அன்னமேரி அவர்களின் அருந்தவப் புதல்வி ஆரோக்கிய றூபி இன்று (28-4-80) திங்கட்கிழமை தனது முதலாவது பிறந்த நாளை தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். அவரை மருத மடுமாதாவின் அருள் பெற்றுச் சகல கலைகளும் கற்று சௌகரியமாக நீடூழி வாழ வேண்டுமென்று பேரன்மார், பேர்த்திமார், பெரியையாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், டொக்கு டொக்கு சித்தப்பா, சித்திமார், அன்ரிமார், அக்காமார், அண்ணாமார், தம்பிமார், மச்சாள்மார், அத்தான்மார் அனைவரும் வாழ்த்துகிறார்கள். 5616

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் 26 ஸ்ரீ 3433 டாட்டா பென்ஸ் லொறி விற்பனைக்கு உண்டு. க. சிவபாதசுந்தரமூர்த்தி, நவக்கிரி, புத்தூர். 5606

3½ அல்லது 7 பரப்புக் காணி திருநெல்வேலி பாம் றோட்டுக்கு எதிராக 100 யார் தூரத்தில் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: சி. பாலசுப்பிரமணியம் தபால் சந்தோர் பங்களா, கோண்டாவில், டெலிபோன்: (228) 5605

செ...ழிப்பண்ணை உரம் விற்பனைக்கு ...ண்டு தொடர்புகொள்ளவும்: "அண்ணை விவசாயப் பண்ணை", புகையிரத வீதி, இணுவில். 559[illegible]


## மத்திய மீன்பிடி ஆராய்ச்சி நிலையம்

(கொழும்பு)

மத்திய மீன்பிடி ஆராய்ச்சி நிலையமொன்று விரைவில் அமைக்கப்படவுள்ளதாக மீன்பிடி அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா தெரிவித்தார்.

மீன்பிடி ஆராய்ச்சி நிபுணர்களால் பேர்சோசெய்யப்பட்ட பாரிய திட்டத்திற்கமையவே இந்நிலையத்தை நிறுவவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

[வெ]


# தமறேன்

அனைத்தையும் அழிப்பது

தமறேன் 60% எல். சீ. தனிச் சிறப்புள்ள கிருமிநாசினி. அது பல விதங்களில் செயற்படும். பூச்சிகளின் உடல் முழுதும் செறிந்தும், நிலைத்து நின்றும், பட்ட மாத்திரத்திலும் உட்சென்று தாக்கியும் செயற்படும் பல சிறப்புகள் கொண்டது. கொறிக்கும், உறிஞ்சும், துளைக்கும் பூச்சி புழுக்களையும், மூட்டுப் பூச்சி, அழுக்கணவன், வண்டு, அந்துப்பூச்சி, மயிர்க்குட்டி, இலைப்பூச்சிகள், தாவர மூட்டுப் பூச்சிகள், இலைத்தத்துவெட்டிகள், சந்துக்குத்திகள், மற்றும் நெல், பருத்தி, ...தை முதலாம் புளி மரங்கள், காய்கறிகள், மிளகாய், கரும்பு, அவரை, சோளம், உருளைக்கிழங்கு, வெங்காயம், புகையிலை, கனி மரங்கள், அலங்காரத் தாவரங்கள் ஆகியவற்றைத் தாக்கும் எல்லாப் பூச்சி இனங்களையும் கட்டுப்படுத்த உலகெங்கும் தமறேன் பரவலாகப் பாவிக்கப்படுகிறது.

தமறேன் பல முனைச் சக்தி கொண்டதானதால், பல்வேறு விதமான பூச்சியினத் தாக்குதலுக்கு ஆளாகும் பயிர்களைக் காக்கப் பாவிக்க அது மிகவும் ஏற்றது.

பாவியுங்கள்
BAYER
தரமான பீடைநாசினிகள்

இலங்கையில் 'பாயர்' பீடை நாசினிகளின் உற்பத்தியாளர்கள்:

ஹேகெம் லிமிட்டெட்
50, பொஸ்டர் ஒழுங்கை
கொழும்பு 10.
தொலைபேசி: 93563

| | | | |
|---|---|---|---|
| 50 மில்லி லீட்டர் | ரூ. 11-50 | 100 மில்லி லீட்டர் | ரூ. 21-00 |
| 200 மில்லி லீட்டர் | ரூ. 38-00 | 450 மில்லி லீட்டர் | ரூ. 82-50 |
| 4.5 லீட்டர்கள் | ரூ. 750-00 | | |


## இலங்கை கிராமிய மீளமைப்பு நிறுவனம்

## பாலர் ஆசிரியர்கள் தேவை

1. இந்நிறுவனத்தின் பாலர் கல்வித் திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட அலுவலகத்திலும் கடமையாற்றுவதற்கு பாலர் ஆசிரிய பயிற்சியும் அனுபவமும் பெற்றவர்கள் தேவைப்படுகின்றனர். விரும்புபவர்கள் கல்விச் சான்றிதழ்களுடனும் மற்றும் சான்றிதழ்களுடனும் 30-04-80-க்கு முன்னர் காலை 8-30 — பிற்பகல் 4-30க்கு இடையில் நேரில் சமூகந்தருமாறு வேண்டப்படுகின்றனர்.

**2. தட்டெழுத்து, சுருக்கெழுத்தாளர்தேவை**

ஆங்கில அறிவும் அலுவலக கடமைகளில் போதிய பயிற்சியும் உள்ள தட்டெழுத்து, சுருக்கெழுத்தாளர் (Steno-typist) தேவைப்படுகின்றனர். ஆகக் குறைந்த சம்பளம் மாதம் 400/-. அனுபவம் உள்ளோர் மட்டும் அலுவலக நேரத்தில காலை 8-30 — 4-30க்கு இடையில் 30-04-80க்கு முன்னர் நேரில் சமூகந்தருமாறு வேண்டப்படுகின்றனர்.

**இலங்கை கிராமிய மீளமைப்பு நிறுவனம்,**
70, புங்கங்குளம் தெரு,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
5315

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஈடு 442

1. சின்னத்துரை இராஜேந்திரம் செல்லையா
2. ஜெகசிதைம்பலம் செல்லையா இருவரும்
இரண்டாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்,
வழக்காளி

எதிராக

பொன்னுச்சாமி இராஜரத்தினம்,
ஆனைப்பந்தி, வாழ்ப்பாணம். எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 442-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1980-ம் ஆண்டு மே மாதம் 14-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

கைக் கடன் வட்டி ரூபா 2,665-00 பின் 24-3-77 தொடக்கம் 8-5 78 வரைக்கும் ரூபா 2000-00க்கு 15% வீத வட்டியும் பின் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 9% வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 473-20.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கிறை "இராசபுலம்" நில. பர. 7½ லகத்தொழிற்சாலையும் சைக்கிள் கடையும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும் இணற்றில் பங்கும். எல்லை கிழக்கு தம்பு தருமலிங்கம் பெண் பாக்கியமும் தியாகராசா சதாசிவமும் மறுபேருக்கும், வடக்கு றோட்டு, மேற்கு சதாசிவம் சட்டநாதர் பெண் பரமஸ்வரிக்குரிய ஆதனம், தெற்கு வைரவி முருகனின் ஆதனம் இதிற் சொரியலாய் அரைவாசி (½) பங்கு.

**சி. செ. மாரிமுத்து,**
நீதிமன்றங்களின்விற்பனவு ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்.

"விதானை வளவு", சித்தன்கேணி,
19-3-80. 5606

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நாம் செல்லவேண்டிய திசையை தந்தையின் நினைவுச்சின்னம் எமக்குக் காட்டி நிற்கிறது"

## நினைவாலயத் திறப்பு விழாவில் 'அமிர்'

(யாழ்ப்பாணம்)

"தந்தை செல்வா எமக்கு விட்டுச்சென்ற கட்டளையை- அவர் எமக்குக் காட்டிய சுதந்திரப் பாதையை-நாம் செல்ல வேண்டிய திசையை கலங்கரை விளக்கம்போல் இந்த நினைவுச் சின்னம் அறிவித்துக் கொண்டிருக்கும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது"

தந்தை செல்வா நினைவாலயத்தை திறந்துவைத்துப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு அ அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

தந்தை செல்வாவின் பூதவுடல் தகனம் செய்யப்பட்ட இடத்தில் நிறுவப்பட்ட 80 அடி உயரமான நினைவாலயத்தைச்சுற்றிஅமைக்கப்பட்ட மேடையில் தந்தை செல்வா அறங்காவல் குழுத் தலைவர் திரு. கு. நேசையா தலைமையில் விழா நடைபெற்றது.

### ஜோடனை அலங்காரம்

அப் பகுதி எங்கும் சிகரங்கள் அலங்கார வளைவுகள், தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன அதனைச்சுற்றியுள்ள மாநகரசபை, பூங்கா, பொது சன நூலகம் வர்ண ஒளிகளால் மின்னிக்கொண்டிருந்தது.

பி. ப 3 மணியிலிருந்தே நாலாபக்கங்களிலிருந்தும் மக்கள் வெள்ளம் நினைவாலயத்தை நோக்கி பெருக்கெடுத்து வந்து கொண்டிருந்தது. ஆவல் மேலீட்டால் வந்துகொண்டிருக்கும் மக்கள் வெள்ளத்தைக் கட்டுப் படுத்த நினைவாலயத்தைச் சுற்றி தொண்டர்கள் சீருடை அணிந்து பணியாற்றிக்கொண்டிருந்தனர்.

### அரங்கு நிரம்பி வழிந்தது

எதிரேயுள்ள துரையப்பா விளையாட்டு அரங்க பார்வையாளர் பகுதி பி.ப. 4 மணிக்கே நிரம்பிவிட்டது. அதன்பின் மக்கள் வெள்ளம் மைதானத்தை நிரப்பத்தொடங்கியது.

### அரசாங்க உத்தியோகத்தர்கள்

பதில் அரசாங்க அதிபர் திரு ஜெகந்நாதன், திட்டமிடல் பணிப்பாளர் திரு. சிவதாசன், யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. கே. சிவஞானம் உட்பட மற்றும் பல அரசாங்க உத்தியோகத்தர்கள் வந்திருந்தனர்.

கூட்டணி கிழக்குமாகாண எம். பி.க்கள், திரு. கணேசலிங்கம், திரு. சம்பந்தன் மற்றும் வடமாகாண எம். பிக்களும் வந்திருந்தனர்.

மன்னார், மட்டக்களப்பு, திருமலை, அம்பாறை பொத்துவில் போன்ற பல இடங்களிலிருந்தும் ரயிலிலும், லொறிகளிலும், பஸ்களிலும் பெருந்திரளான மக்கள் வந்திருந்தனர். கவிஞர் காசிஆனந்தனும் வந்திருந்தார். இளைஞர் பேரவை உறுப்பினர்கள், மகளிர்பேரவை உறுப்பினர்கள் ஆகியோரும் வந்திருந்தனர்.

நாதஸ்வர இசை, அங்குவந்தவர்களை வரவேற்றுக் கொண்டிருந்தது.

### தலைவர்கள் மலர் அஞ்சலி

சரியாக 5-15 மணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், யாழ். நகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் ஆகியோர் கைகளில் மலர்களை ஏந்தி வலம்வந்து அஞ்சலி செலுத்தினர்கள்.

நினைவாலயத்தில் இரு பெரும் குத்துவிளக்குகள் வைக்கப்பட்டிருந்தன. எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம், கூட்டணித் தலைவர் திரு. சிவசிதம்பரம், மற்றும் எம்பிக்கள், யாழ் மாநகரமுதல்வர்இராஜா விசுவநாதன் ஆகியோர்மங்கள விளக்கேற்றிவைத்தனர். முன்னாள் யாழ் நகர முதல்வர் டாக்டர் ஏ தர்மலிங்கம் மற்றும் மாநகரசபை கூட்டணி உறுப்பினரும் மங்கள விளக்கேற்றிவைத்தனர்

வண. பிதா தனிநாயகம் அடிகள், சாவகச்சேரி நகர முதல்வர் திரு எஸ், கே. திரவியநாயகம், வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் திரு கே ஞானமூர்த்தி, பருத்தித்துறை நகர முதல்வர் திரு. வேலுப்பிள்ளை மற்றும் உறுப்பினர்களும் மேடைக்கு வந்து அஞ்சலி செலுத்தினர்கள். தந்தை செல்வா அறங்காவல் குழுவினரான திரு நேசையா திரு. சச்சிதானந்தன், ஈழவேந்தன், கட்டடக்கலைஞர் வி எஸ் துரைராசா ஆகியோரும் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்

### தந்தை செல்வா குடும்பத்தினர்

தந்தை செல்வா குடும்பத்தினரான திருமதி செல்வநாயகம், திரு சி சந்திரகாசன், தந்தை செல்வாவின் பேரன் ஆகியோரும் இவ்விழாவில் கலந்து கொண்டு அஞ்சலிசெலுத்தினர்

### உதயசூரியன் சால்வையுடன் 'அமிர்'

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம், உதயசூரியன் சால்வை அணிந்திருந்தார். வீதியிலும், துரையப்பா அரங்கிலும் திரண்டு நின்ற மக்கள் வெள்ளத்தை தொண்டர்களால் கட்டுப்படுத்த முடியாமல்போய்விட்டது. உணர்ச்சிப் பெருக்கினால், மதிலையும் தாண்டி பெருக்கெடுத்த மக்கள் வெள்ளம் வீதியெங்கும் பரந்து, வளைந்து மேடை விளிம்பில் அலைமோதிக் கொண்டிருந்தது.

வீதியின் ஒரு பகுதியில் மக்கள் வெள்ளம், மேடையையும் தாண்டி உள்ளேவந்து ஏற்கனவே இடம் பிடித்தவர்களையும், முட்டிமோதிக்கொண்டிருந்தது.

விருந்தினர்பகுதியில், ஆண்களுக்கு அருகில், பெண்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. மகளிர் பேரவையினர், பெண்களுக்கு தனியான இடம் ஒதுக்கப்படவேண்டுமென்று அறங்காவல் குழுவினர்களுடன் வாதாடி, தனி இடத்தைப் பெற்று தங்கள் உரிமையை நிலைநாட்டிக்கொண்டனர்.


நாதஸ்வர இசை முடிந்ததும் விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமானது திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தின், தமிழ் தேசியகீதத்துடன் விழா ஆரம்பமானது.

### புனிதமான தினம்

இதைத் தொடர்ந்து நடந்த தலைமையுரையில் தலைவர் திரு. கே. நேசையா பேசுகையில் கூறியதாவது:- இது ஒரு புனிதமான தினம் 3 ஆண்டு தினத்தில் தந்தை செல்வாவை நினைவு கூருகிறோம். அவர் ஒரு தீர்க்கதரிசியாக, வழிகாட்டியாக, விடுதலை வாசற்படிக்கு எங்களைக் கொண்டுவந்து சேர்த்தார் அவர் தமிழினத்திற்கு செய்தது பெரிய சேவையாகும் தமிழ் மக்களின் மனதில் தேசிய உணர்ச்சியை ஊட்டினர். உண்மையும், அகிம்சையும் பொருந்திய வழிகாட்டியாக இருந்துவந்தார். எங்களுக்கு சுய நிர்ணயம் உண்டென்பதை உணர்த்தினர் எங்களை நாங்களே ஆளவேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கினர். சுதந்திரப், பற்ற மக்கள் கோடு சல்ல என்பதை தந்தை எடுத்துக் கூறினர். இந்த நினைவாலயத்தை ஒரு ஆலயமாக எண்ணிட பாவிக்க வேண்டும் [illegible] ஒரு வழி


(7-ம் பக்கம் பார்க்க)


# புரோற்றினெக்ஸ்
## புரதச்சத்து நிறைந்தது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊர்காவற்றுறை-புளியங்கூ__ ... ஆலய மஹாகும்...

## அடிவர்க்கு அருளினை வா... அன்னைமகமாரி ஆலய...

-- துரைராஜா சிவஞானச்செல்வம் --
(தேவஸ்தான, அறங்காவலர்)

பண்ணிய புண்ணியத்தின் பயனும் பராசக்தி செருத்தனைப் புளியங்கூடலில் குடிமுழுதும் ஆள குலதெய்வமாய் கோயில்கொண்டு அருள்பாலிக்கின்றாள். ஒன்றரை நூற்றாண்டு காலத்திற்கு முன்பு உழுதுண்டு வாழ்ந்த வைரமுத்தர் என்னும் உறைப்பான பக்தியாளராய் விளங்கிய சைவமகன் சுழிபுரத்தில் திருக்கோயில் திருப்பணி சம்பந்தமாக ஏற்பட்ட பிணக்கின்போது பனிப்புலம் முத்துமாரி அம்பாளின் பலியிடும்கத்தியை ஆவேசத்தோடு கையிலெடுத்துக்கொண்டு தீவகத்திற்கு வந்து செருத்தனைப்பதி புளியங்கூடலில் மரநிழலில் அக்கத்தியை நாட்டி நாளும் பொழுதும் வணங்கிய அம்மனின் ஆயுதமே இன்று மகாமாரி உருவந்தாங்கி நிற்கின்றது.

வைரமுத்தரின்பின் அவருடைய மகனும் விளங்கிய கதிரேசர் என்பவரே ஆலய பரிபாலனத்தை நடாத்தினர். கதிரேசர் காலஞ்சென்றதற்குப் பின்னர் அவர் வழித்தோன்றலாகிய தம்பர் என்பவர் ஆலயத்தைச் சிறப்புறப் பரிபாலித்தார். அவரைத் தொடர்ந்து அவரது மூத்த புதல்வர் சுப்பிரமணியம் ஆலயத்தை அருள் நெறிபரப்பும் திருக்கோயிலாகப் பேணிக்காத்தார். அவர் அமரத்துவம் அடைந்தபின்பு அவருடைய மூத்தமகனும் அடியேனுடைய அன்புத் தந்தையுமாகிய துரையப்பா அவர்கள் மகாமாரி அம்மன் ஆலயபரிபாலனத்தை அடியார்கள், அன்பர்கள் ஆதரவுடன் பரிபாலனம் செய்தார்கள்.

1860-ம் ஆண்டளவில் சிறிய தோர் மரநிழலில் அமர்ந்திருந்த மகாமாரி இன்று திருப்பணிகளின் மூலமாக பெருங்கோயில் கொண்டிருக்கின்றாள். சுற்றுப்பிரகாரவீதிகளும் வசந்தமண்டபமும், சப்பரமும், சித்திரத்தேரும், அன்னதானமடமும், தெப்பக்குளமும், பூந்தோட்டமும், தேர்முட்டியும் அம்பாளின் தேவஸ்தானத்தை அலங்கரிக்கின்றன.

என்னுடைய தந்தையார் காலத்தில் கோடிபுண்ணியக் கோலமாகிய இராஜகோபுரம் பெருமுயற்சியோடு ஆரம்பிக்கப்பட்டது. அன்னாரின்மறைவுக்குப் பின்பு அப்பணியை அடியார்களின் ஆதரவோடு அடியேன் தொடரவேண்டியவனானேன். அருட்சக்தியின் அனுக்கிரகத்தோடு அழகிய சிற்பங்கள் தாங்கி ராஜகோபுரம் எண்பது அடி வரை வானை நோக்கி எழுந்துநிற்கின்றது. இன்றைய மகாகும்பாபிஷேகத்தின்போது ராஜகோபுரத்திற்கும் கும்பாபிஷேகம் நிகழவுள்ளது.

எங்கள் தீவகம் மிகுதியும் வரட்சியுற்றபகுதியாகும். இப்பகுதியில் வரட்சியால் உண்டாகும் வேதனைகளும் சோதனைகளும் சொல்லில் அடங்காதன. அன்னை மகாமாரியிடம் அடியார்கள் தங்கள் வேதனைகளை வந்துசொல்லுவது வழக்கம்.

வேண்டப்படுவதை அறிந்து வரமருளும் தயா... மாரி தண்ணீர் செய்... அடியார்களை ...துன்... தும் மீட்டிருக்... ளுள்... பிணியால் அலற்ப... யார்கள் ஆலயத்திற்... அடைக்கலம் ...ந்து பெற்று மகிழ்ந்திருக்கி... தீவகத்தின் பலபா... ந்தும் அடியார்கள் இ... பத்திற்கு வருகைதந்... படுவது வழக்கம். கா... செலுத்தியும் ...தலா... துருகியும் அன்ன... யிட்டதிலே சரணடை... புகனம் பதிஞசைய...



இராஜகோபு... வைத்து அசராவ...

## அன்னை மகாமாரியின் அருள்மாரி பொழியட்டும்

புளியங்கூடல் ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன சப்ததள இராஜகோபுர பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் சைவ உலகிற்கு அம்பாளின் அருள்மாரி பொழிய வைக்கும் ஒரு சிறந்த நிகழ்ச்சியாகும்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தீவகம், நயினை ஸ்ரீ நாகம்பாள் வேலணை ஸ்ரீ முத்துமாரி அம்பாள், புளியங்கூடல் ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆகிய மூன்று தேவஸ்தானங்களை அமைத்து அம்பாள் வழிபாடு செய்யும் 'தவம்' பெற்றது "தவமும் தவமுடையார்க்கே" என்ற பொன்மொழிப்படி தீவகமக்கள், அம்பாள் தேவஸ்தானங்கள் அமைத்து வழிபடும் பண்பால் தவமுடையவர்களாகின்றார்கள்.

புளியங்கூடல் ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தானம் எங்கள் குலதெய்வமாகும். குலதெய்வத்தின் சரித்திர நிகழ்ச்சியான இக்கோபுர கும்பாபிஷேகம் சைவ உலகிற்கே அருள் பொழியும் நிகழ்ச்சியாக வேண்டி அம்பாளின் பாதார விந்தங்களில் சிரந்தாழ்த்தி வணங்குகின்றேன்.

தேவஸ்தான அறங்காவலர் திரு. து சிவஞானச் செல்வம் கண்கவர் சருங்கற் கோபுரத்தினை அம்பாளுக்கு அமைப்பதில் பூரண வெற்றி கண்டுள்ளார். அம்பாள்பக்தர்களின் மனம்நிறைந்த நன்றி அவருக்குரியது.

ஈ வி தளையசிங்கம்
(பட்டயக் கணக்காளர்)

ஸ்ரீ மகாமாரி அம்பாளின் புனராவர்த்தன சப்ததள இராஜகோபுர நூதனப் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவுபெற வாழ்த்துகின்றோம்.

**வே. த. சுப்பிரமணியம் அன் சன்ஸ்**
புளியங்கூடல் சந்தி, ஊர்காவற்றுறை.

**து. மாணிக்கவாசகர்**
பைலட் டீசல் என்ஜினியர்ஸ்
புளியங்கூடல் சந்தி, ஊர்காவற்றுறை.

**நியூ சாந்தி கபே**
சருவில் வீதி, ஊர்காவற்றுறை.

**குமரன் கூல்பார் & கபே**
வங்களாவடி சந்தி, வேலணை.

**மலாயன் கபே**
36, 38, பெரியகடை, யாழ்ப்பாணம்.

## 'அற்புதத்தெய்வம் இதனில் மற்றுமுண்டோ'

தங்கம்மா அப்பாக்குட்டி
(தலைவர், துர்க்காதேவி ஆலயம், தெல்லிப்பழை)

இறைவன் உயிர்களை ஆட்கொள்ள எழுந்தருளியிருக்கும் இடங்களே ஆலயங்கள், எங்கும் பரவியுள்ள தண்ணீரை ஊற்றுக்கால் வழியே நாம் பெறுதல் போலவும் பசுவினிடமுள்ள பாலை மடிவழியாகப் பெறுதல் போலவும் இறைவன் திருவருள் போலவும் தேங்கிநின்று வெளிப்படும் இடம் ஆலயங்களாகும்.

ஆலயங்கள் வேத சிவாகமங்களில் விதித்த முறைப்படி அமைந்தவை. அவைகளைத் தூய்மையோடு போற்றிக் காப்பது நம் கடமை. திருக்கோயில் இல்லாத ஊரைத் 'திரு இல்லாத ஊர்' என்று கூறுகிறார் அப்பரடிகள். 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' நம் நாட்டுப் பண்பாடும் கோயில்லாத ஊர்களைக் காடுகளாகக் கூறுகிறது திருமுறை. திருக்கோயில் தத்துவங்களை உணர்ந்து அதனைப் பேணிக் காப்பதனால்தான் நாடு நன்மையைப் பெறும், கோயில்களில் மூர்த்திகளுக்கு அபிஷேகம் அர்ச்சனை ஆராதனைகள் முதலிய வழிபாட்டு முறைகள் ஆகமங்களில் விதித்த முறைப்படி நடைபெறுதல் வேண்டும் நித்திய, நைமித்திக பூசைகள் வழுவின்றி நடைபெறுதல் வேண்டும். முன்னவனூர் கோயில் பூசைகளில் முட்டுப்பாடு ஏற்படுதல் கூடாது என்று கூறுகிறார் திருமூலர்.

> முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடில்
> மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
> கன்னங்களவு மிகுந்திடும் காசினி
> என்னரும் நந்தி எடுத்துரைத் தவே

என்பது ஒருமந்திர...

எண்ணற்ற திருக்கோயில்கள் இந்த ...ட்டைப் புண்ணிய ... பாட்டுக்குரியவை தீவுப்பகுதி மக்களின் கண்கண்ட தெய்வமாக புளியங்கூடல் மாரி அம்பாள் காட்சி தருகிறாள். 'அற்புதத் தெய்வம் இதனில் மற்றுண்டோ' என்று அதிசயிக்கின்றன. அவ்வூர் மக்கள் இதனாலேயே பக்திப்பரவசத்துடன் பில் அல்லும் பகலும் உழைத்த அறங்காவலர் சிவஞானச்செல்வம் அவர்கள் அம்பாளிடத்தில் அயராத பக்தியுடையவர். நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் அம்பாளைத் துதிக்கும் பெரும்பக்தர் இத்தகைய அருட்செல்வரின் பெருமுயற்சி

நேர்த்திகள் செலுத்தி வழிபாடு செய்கின்றனர் இவ்வருள் கொழிக்கும் திருக்கோவிலில் கும்பாபிஷேகம் நடைபெறுவது எம்மனைவருக்கும் பெருவகையைத்தருகிறது அழகொழுகும் தலைவாசல் இராசகோபுரமும திருப்பணிசெய்யப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது இத்திருப்பணி மிகமிகப்பாராட்டுதற்குரியது அம்பாள் அருட் கருணையின் சிறப்பினால் இவ்வாலயம் பெருஞ்சாந்தி விழாக் கோலம் பூண்டு தெய்வதரிசனத்தை யாவர்க்கும் வழங்கி அனைவருக்கும் பேரருள் பாலிக்கட்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

## அறங்காவலரும் அடியார்களும் பாராட்டுக்குரியவர்களே

பண்டிதர்

ஊர்காவற்றுறைத்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அனுப்பியுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:-

"ஊர்காவற்றுறைத் தொகுதியில் இராஜகோபுரங்களையுடைய கோவில்கள் மூன்று உள. இவை யாவும் அம்பாள் கோவில்களேயாகும்.

"மூன்றாவது இராஜகோபுரம் புளியங்கூடல் மகாமாரி அம்மன் கோவிலில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது இத்தொண்டினைச் செய்து முடித்த அறங்காவலரும் ...ளும் பாராட்டுக்குரியவர்கள்.

"அடியார்களை ஈர்த்து அருள் புரியும் புளியங்கூடல் மகாமாரி அம்பாளின் பேரருள்திறனை யாவரும் அறிவர்.

அருள்மிகு அம்பிகையின் ஆலய நிர்வாகம் சிறந்த முறையில் நடைபெற்றுவருகின்றது. கோபுரம் கட்டி முடித்த பின் அம்பாள் கோவிலில் நடைபெறும் மாதோறும் கு-முழுக்கு, பெருவிழாவாக நடைபெறுகிறது அடியார்கள் இவ்விழாவினைக் கண்டுகளித்து அம்பிகையின் அருளினைப் பெற்றுய்வார்களாக."

...கா பொ. இரத்தினம்

## கருணை... மாரிய...

கோபுர தரிசனம் புண்ணியம் ...பர் ப... கோபுர தரிசனம் ... விமோசனம் ...பர் ... திகள் கோவில் ... ஊரில் குடியிரு... பர் சைவச் சான்றோ...

நாம் வாழு... டில் நான்கு ... நற்பெரும் ... அமைந்துள்ள... ஆலயமாக ... என்பது திருமூல... இறைவனையும் ... நினைத்து வழிபடும் ... பண்டுதொட்டு ... கிறது ... திசைக்குத் ... முன்னூரால் ... மூலர் ... நாடிகை ... இன்று ... கிய ... என்று ... விசால... சுந்தரி என்றும், ... றும், காளி என்றும், ... என்றும் ப...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கூடல் செருத்தனைப்பதி ஸ்ரீ மகாமாரி அம்பாள் ...ாகும்பாபிஷேக சிறப்புமலர்

## ...ன வாரிவழங்கும் ...ூலய வரலாறு

...ளும் அயாலய மகா ...தண்ணரிசெய்து தனது ...ார்களைத் துன்பத்திலிருந் ...ட்டிருக்கிறுள் நோய் ...ால் அலைப்படும் அடி ...ள் ஆலயத்திற்கு வந்து ...க்கலம் புகுந்து அருள் ... மகிழ்ந்திருக்கிறுர்கள். ...த்தின் பலபாகத்திலிரு ...அடியார்கள் இந்த ஆல ...கு வருகைதந்து வழி ... வழக்கம். காணிக்கை ...தியும் ாதலாகிக் கசிந் ...ம் அன்னை மகாமாரி ...லே சரணடைவார்கள் ... பதிலுக்கையும் பூக்க வண்ணம் காத்தருளும் புண்ணியவதியின் புனிதப்பார்வை எங்கும் பரவி பயன்விளைப் பதை பலரும் அறிவர்.

பண்டுதொட்டு இன்றுவரை பக்தியாளர்களுக்குச் சக்தியும் முக்தியும் கொடுக்கும் மகாமாரி கும்பாபிஷேகத்தினை ஏற்று கோபுரதரிசனத்தையும் காட்டி எல்லாரும் எல்லாப்பெரும் செல்வமும் எய்தி எல்லா நல்ல நினைவுகளையும் செயலாக்கி வாழ்வாங்குவாழ அன்னை மகாமாரியை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.



...இராஜகோபுரத் திருப்பணியை ஆரம்பித்து ...து அமரரான திரு. சு. துரையப்பா அவர்கள்

### கும்பாபிஷேக நேரம்

காலை 9-06 மணிக்கு இராஜ கோபுர கும்பாபிஷேகம் 9-15 மணிக்கு ஸ்தூகும்பாபிஷேகம். 9-40 மணிக்குமகாமாரிமகாகும்பாபிஷேகம் இரவு அம்பாள் வீதி உலா, இராஜ கோபுர தரிசனம்.

### பெருஞ்சாந்தி கண்டுபிறவிப்பிணி திருங்கள்

தண்ணருளை மாரியென வாரி வழங்கும் தாயானவள் மகாமாரி என்னும் நாமத்தோடு புளியங்கூடல் திருப்பகுதியில் எழுந்தருளிஅற்புதங்களைப் புரிவது யாழ்குடாநாடு செய்த பேறாகும்.

இவ் வாலயத்தில் புதிதாக சப்ததள இராஜ கோபுரம் நிர்மாணிக்கப்பட்டு புனருத்தாரண வேலைகளும் நடைபெற்று இன்று மகாகும்பாபிஷேகம்... என்லும் பெருஞ்சாந்தி நடைபெறுகிறது. ...ப் பெருஞ்சாந்தி காண்பதால் பிறவிகள் தோறும் செய்த வினைகள் மாளும். இதனையே திருஞானசம்பந்தர் பூம்பாவையை உயிர்ப்பித்த பதிகத்தில் ,,பெருஞ்சாந்தி காணுது போதியோ பூம்பாவாய்,, எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இது அனைவர்க்கும் அரிய வாய்ப்பாகும்.

ஆலய அறங்காவலர் திரு து.சிவஞானச்செல்வன் அவர்கள் தமது இளம் வயதிலேயே இத் தனைப் பெரும் பணிகளில் ஈடுபட்டிருப்பது பாராட்டுக்குரியது.தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே.

இராஜ கோபுரத்தை அழகுற நிர்மாணித்த சிற்பிகளின் திறமை வியந்து பாராட்டு தற்குரியது

"கு இராமநாதக் குருக்கள்,

## புனித கோபுரம் கண்டு புண்ணியம் தேடுவீர்

பிரதிஷ்டா சிரோமணி, சிவாசார்ய துரந்தரர்
பிரம்மஸ்ரீ சாமிவிஸ்வநாதக் குருக்கள்

ஓர் ஆலயத்துக்கு முக்கியமானவை ராஜகோபுரம், மணியோசை. ஆலய வழிபாடு செய்யவருபவர்கள் வந்தவுடன் வழிபாடு செய்வது கோபுரத்தையே. இக்கோபுரமானது, அதன் வரிவர்க்க முறைகள், பிரமாணங்கள் யாவும் சிற்ப சாத்திரரீதியாக அமைக்கப் படவேண்டியவை. ஓர் ஆலயத்தில் கர்ப்பக்கிரகத்தின் பிரமாணத்தைக்கொண்டே அர்த்தமண்டபம், மகாமண்டபம், தர்சனமண்டபம், ஸ்தம்பமண்டபம், பிரகாரம், கோபுரம், கோபுரமண்டபம் என்பன அமைக்கப்படவேண்டும். இக்கோபுரமானது மூன்று நிலம், ஐந்து நிலம், ஏழு நிலம் எனப் பலவிதமாகவும், இடவசதி, பொருள் வசதிக்கேற்ப சிற்பசாஸ்திர பிரமாணத்தின் படியும், சிற்ப அறிவு நிறைந்த கைதேர்ந்த சிற்பாசாரியார்கள் மூலமாக அமைக்கப்படவேண்டும்.

இதன் அமைப்பு, பிரதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்ற பஞ்சபூதவடிவிலும்; சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்ற ஆறு ஆதாரதத்துவத்தின் வடிவிலும் கலசங்களை- பஞ்சபூதம், சப்ததாதுக்கள் என்ற நிலையில் ஐந்து கலசம், ஏழுகலசம் என்ற முறையில் ஸ்தாபித்து; சிவாலயமானால் சிவனுடைய லீலோற்பவ மூர்த்தங்களை சுதையாக தளங்களில் அமைத்தும் தேவி, முருகன், விஷ்ணு ஆலயங்களில் அந்த அந்த மூர்த்திகளில் தத்துவ ரீதியில சுதைகளைச் செய்து சிற்பாசாரிகளின் கைவண்ணத் திறமையின் காரணத்தினுலும் இதை செய்விக்கும் சைவப் பெரியார்களின் சிறந்த மனநோக்கினுலும் ஆலய மூர்த்தியின் கீர்த்திவாய்ந்த அனுக்கிரகத்தாலும் சிறப்பாக அமைந்து பொலிவாக விளங்குவதை நாம் எமது இதயத்தால், கண்களால் கண்டு தரிசிக்கும் பாக்கியத்தைப் பெறுகின்றேம்.

ஆகவே புளியங்கூடல் ஸ்ரீ அன்னை பராசக்தி முத்துமாரி அம்பாளின் பேரருள் துணைகொண்டு சைவ அன்பர்களின் தருமநிதியினுலும் தர்மசிந்தை நோக்குடனும் நிர்மாணித்த ராஜகோபுரகும்பாபிஷேகம் அன்னையின் பேரருள் துணையுடன் சிறப்பாக வேதவித்தகராகிய சிவாசாரியப் பெருமக்களின் கிரியா நிகழ்ச்சியுடன் பொலிவுற்ற பெரும் சாந்தி விழாவாகவும், "கோபுரதரிசனம் கோடி புண்ணியம்'' என்ற சிறந்த வார்த்தையின்படி பக்தர்கள் மனங்களிற் பதிந்தும் கண்ணினுல், பார்த்து மனம், வாக்கு காயம் என்னும் திரிகரண சுத்தியுடன் வழிபடும் அன்னை பராசக்தி, ஸ்ரீ முத்துமாரி அம்பிகையின் பேரருள் பெற்றுய்யும்வண்ணம் இறைவியின் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்.

### அன்னையை அஞ்சலிப்போம்

அன்னைக்குப் பெருஞ்சாந்தி நடைபெறும் இன்று அவள் சந்நிதானத்தில் நாம் நின்று துதிப்போம்!சத்திய ஞானந்த ரூபியே,சர்வாதிஷ்டான ரூபியே,சர்வ சாட்சியாகின்றவளே' சர்வாத்மசேகருபே'சர்வேதாந்தப் பொருளே, சமரச வடிவே,சர்வ பூரணியே சர்வாசத்தியே,சர்வாபீஷ்டத்தைக் கொடுப்பவளே!சர்வேஸ்வரியே! சர்வகாரணியே! நிஷ்களவடிவே! நிஷ்கிரிய! சொரூபியே! நிர்விகாரியே!நிரஞ்சனியே! நிராதரியே!நிர்க்குணியே!நித்தியசுத்தசுத்தபுத்த அகண்ட அத்துவிதசொரூபியே சகல இலட்சணமும் பொருந்திய திவ்விய மங்கள மூர்த்தியே!உன்னைத்துதிக்கின்றேம். இப்படித் துதிக்கின்றவர்களுக்கு இகத்தில் சகல போகமும் புசித்து அந்தத்தில் தேவியின் பதம் அடைவர். இப் பேர்ப்பட்ட அருள்மிகு மகாமாரிக்கு சுக்கிரவாரத்தில் தயிரன்னமாவது, பாயசமாவது நியமமாக நிவேதனம் செய்வித்து சகலாபீஷ்டத்தையடைந்து, அந்தத்தில் மோட்சத்தை அடைவோமாக.

பே. சந்திரசேகரம்
(சங்கீத பூஷணம்)

### பேராசிரியைநீலா சொற்பொழிவு

தமிழ்நாடு தருமைஆதீனப் பல்கலைக்கழகப் பேராசிரியை திருமதி.ப நீலா இன்று பகல் புளியங்கூடல் மகாமாரியம்மாள் ஆலயத்தில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்'

## ...கருணைமழை வேண்டுவோர்வருக ...மாரியம்மனைத் தொழுக

...புர தரிசனம் கோடி ...யம் என்பர் பக்திமான் ...கோபுர தரிசனம் பாவ ...னம் என்பர் சித்தாந் ... கோவில் இல்லாத ...குடியிருக்கலாகாது என் ...வச் சான்றோர்

... வாழும் ஈழவளநாட் ...நான்கு திசைகளிலும் ...ங் கோவில்கள் ...துள்ளன "ஆலயம் ...ாக அமர்ந்திருந்தான்' ... திருமூலர் வாக்கு ...னையும் சக்தியையும் ...து வழிபடும் வழக்கம் ...தொட்டு வளர்ந்துவரு ... "கறுமின் எட்டுத் ...குந் தலைவியை" என்று ...ால் எழுப்பியவர் திரு ... 'வணங்கிடும் ... ...லை" என்று வேண்டு ... அவர் அன்னத்த... ... அம்மையை மீனாட்சி ..., காமாட்சி என்றும், ...ாட்சி என்றும், திரிபுர ... என்றும், கன்னி என ...ாணி என்றும், துர்க்கை ...ம் பல்வேறு பெயரிட்டு நம் முன்னேர் வழிபட்டனர். தமிழகத்தில் பல்வேறிடங்களில் சக்தியை மாரியம்மன் என்ற திருப்பெயருடன் வழிபட்டு வருகின்றனர். மாரி மழை தரும் தெய்வம், கருணைமழை புரியும் கன்னித் தெய்வம். தலையாய தெய்வம் அவள் தையல் நல்லாளாய்த் தவத்தின் தலைவியாய் தனியொரு நாயகி தானேயாய் உபாயம் அளிக்கும் ஒருத்தியாய் விளங்குகின்ற சக்தியே மாரியம்மன். அவளே, ...களும் ஈழத்தில் வடலை ...லை ...ந்துள்ள ஏழு பெருந்தீவகங்களும் நன்கு போற்றுகின்றன. லைடன் என வெள்ளையரால் விதந்து அழைக்கப்பட்ட வேலணைத்தீவில் புளியங்கூடல் என்னும் பொற்பதியில் மாரியம்மன் என்னும் திருக்கோவில் அமைந்துள்ளது அதியற்புதம் நிறைந்த மாரியம்மனை நினைந்துருகி நிற்கும் பக்தர் கூட்டமும், சித்தத்துள்ளிருத்தும் சித்தர் கூட்டமும் கலந்து வழிபட்டுவரும் சிறப்புடையது அத்திருக் கூடல் மக்கள் பெரும் பாக்கியசாலிகள். முன்னர் ஆலயத்தை அழகுற அமைத்தனர். பின்னர் ஒரு பெரும் இராசகோபுரமும் எழுப்பியுள்ளனர். இராசகோபுரம் தெய்வம் எழுந்தருளிநிற்கும் திருக்கோலம். அதனைத் தெய்வமாக எண்ணி வழிபடவேண்டும் ஆலயத்தை நோக்கி வரும் அடியார்களுக்கு முதலில் தெய்வீக விருந்தளிப்பது இராச கோபுரம்.

திருக்கோவில்கள் தெய்வீகக் கருணை நிரம்பிவழியும் திருத்தலங்கள். மூலமூர்த்தியையும் பரிவார மூர்த்திகளையும் கோபுரத்தையும் கோவிலையும் கோவில் வீதியையும் தெய்வமாக எண்ணி வழிபடுவதே உண்மையான வழிபாடாகும். மகாகும்பாபிஷேகம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும். ஆலயத்துள் ஆண்டவனை இருத்துதலே மகாகும்பாபிஷேகத்தின் முடிந்த கருத்தாகும். மந்திரம் திரவியம் பூசை வழிபாடு யாவும் ஒருங்கிணைந்து இறைவியை மகிழச் செய்கின்றன. அதனுல் இறைவி ஆலயத்துள் மூர்த்திகரத்துடன் வீற்றிருப்பாள். பூசை புரிபவர்களும் (6ம் பக்கம் பார்க்க)

### - வித்துவான் சி ஆறுமுகம் -

ஆதி அருதி சுகராணி, காரணி
"வேதம தாய்ந்தனன் வேதிய ாய்நின்ற
சோதி தனிச்சுடர் சொரூபமாய் நிற்கும்
பாதி பராபரை பன்னிரண்டாரதியே
என்பது திருமந்திரம்.

பூரண சக்தியாகிய ...ஈழத்தின் பல பகுதி திலை கோவில். புளியங்கூடல் மாரியம்மன் என நினைந்ததும் உடலம் புல்லரிக்கும். விதிர் விதிர்க்கும். கண்கள் நீர் சொரியும். உள்ளம் தூய்மையடையும். இது நல்லோர் வாக்கு இத்தகைய கருணை முதல்வியை, தானே எழுந்த தத்துவநாயகியை, சிந்தையின் உள்ளே ...

ஸ்ரீ மகாமாரி அம்பாளின் புனராவர்த்தன
சப்ததள இராஜகோபுர நூதனப்
பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம்
சிறப்பாக நிறைவுபெற

வாழ்த்துகின்றேம்.

**வித்தியா மோட்டோர்ஸ்**
(R. G. கட்டிடம்)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

**லிங்கம் கூல் பார்**
5., மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**கருணு ஸ்ரோஸ்**
139, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

**வி ம ா கி**
27/3, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**றேணுகா ரேடேர்ஸ் (Traders)**
237, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றுமொரு மாநிலத்தில் கெனடிக்கு வெற்றி!

## கார்ட்டருக்கு ஈரான் விவகாரம் பாதிப்பில்லை

வாஷிங்டன், ஏப். 27

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கான ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் தேர்தலில் செனட்டர் எட்வேர்ட் கெனடி மற்றுமொரு மாநிலத்தில் வெற்றிபெற்றுள்ளார்.

மெச்சிகன் மாநிலத்தில் நடைபெற்ற இத்தேர்தலில் செனட்டர் கெனடி மிகக் குறைந்த வாக்குகளாலேயே வெற்றிபெற்றுள்ளார்.

இம்மாநிலத்தில் செனட்டர் கெனடியே வெற்றிபெறுவார் என்று முன்னரேயே எதிர்பார்க்கப்பட்டபோதும் அவர் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தாலேயே வெற்றிபெற்றது கடந்த வியாழனன்று ஈரானுக்கெதிரான கார்ட்டரின் நடவடிக்கையால் திரு. கார்ட்டருக்கு எந்தவொரு பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (கு)

# அமெரிக்க முயற்சி தோல்வி: ஈரானிய மக்கள் மகிழ்ச்சி!

தெஹ்ரான், ஏப். 27

பணயக் கைதிகளை விடுவிக்கும் அமெரிக்காவின் முயற்சியில் தோல்வியடைந்ததைக் கொண்டாடும் வகையில் ஈரானிய மக்கள் தமது வீட்டுக் கூரைகளில் ஏறி கோஷித்த வண்ணமிருந்தனர்.

ஈரானிய புரட்சிச் சபையினர் நேற்று வானொலியில் விடுத்த வேண்டுகோளையடுத்தே இவர்கள் இவ்வாறு கோஷமெழுப்பினர்.

அமெரிக்காவின் முயற்சியில் தோல்வியடைந்தது இஸ்லாமியப் புரட்சிக்குமேலுமொரு வெற்றியென்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்கத் துருப்புக்களின் சடலங்கள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளதுடன் ஆறு ஹெலிகப்டர்களும் ஈரானிய பாலைவனமொன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதேவேளையில் அமெரிக்காவின் முயற்சியில் தோல்வியடைந்தது அதிபர் திரு. கார்ட்டருக்கு மனவிரக்தியைக் கொடுக்கவில்லையென்று வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் கூறினார். (கு)

## ராமச்சந்திரன் போட்டியிட மாட்டாராம்

சென்னை, ஏப். 27

ஜனதாகட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான திரு. பா. ராமச்சந்திரன் தமிழ்நாடு சட்ட சபைத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார். (கு)

## மாஜிஅமைச்சர் இ. காங்கிரஸில் சேர்ந்தார்!

புதுடில்லி, ஏப். 27

முன்னாள் வெளியுறவு அமைச்சர் திரு. ஜனசிங், ஜனதாக் கட்சியிலிருந்து விலகி இந்திராகாங்கிரஸ் கட்சியில் சேர்ந்துகொண்டார்.

திரு. ஜனசிங்கிற்கு ஆதரவாக பல முன்னாள் லோக சபை உறுப்பினர்களும் துணை அமைச்சர்கள் சிலரும் இந்திரா காங்கிரஸில் சேர்ந்து கொண்டனர். (கு)

## 25பேர் வேட்புமனு சமர்ப்பித்தனர்

சென்னை, ஏப். 27


நடைபெறவிருக்கும் தமிழக சட்ட சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக இதுவரை இருபத்திஐந்து பேர் தமது நியமனப்பத்திரங்களைத் தாக்கல்செய்துள்ளனர்.

நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யும் இறுதிநாள் 3ம் மாதம் 8ம் திகதியாகும். (கு)


# யூனியன் புழுங்கல் நெல்லு உலர்த்தி.

## தவிடு கொண்டு எரியும் அடுப்பு மூலம் இயங்குவது.

- குற்றும் நெல் அளவை இரட்டிப்பாக்குகிறது
- அரிசியின் இயல்பான சுவை பாதுகாக்கப்படுகிறது
- சாம்பல் அல்லது புகை இல்லாமல் வெப்பத்தைத் தருவது.




விபரங்களுக்கு
சாமுவேல் சன்ஸ் அன்ட் கொம்பனி லிமிட்டெட்.,
த. பெ. எண். 46 கொழும்பு
தொலைபேசி: 32341-4.

Grant K.B.E. 3214

சில நிமிட நேரத்துக்குள்ளாகவே பூச்சி, புழுக்களைக்கட்டுப்படுத்தும் அற்புத சக்திவாய்ந்த சர்வபூச்சிநாசினி

# பரத்தியன் 6|3

மிளகாய், வெங்காயம், நெல், காய்கறி, மற்றும் எல்லாப் பயிர்களையும் பாதிக்கும் சகல பூச்சி புழுக்களையும் உடனே கட்டுப்படுத்தி நீடியகாலம் தங்கும்தன்மையுடைய 'பரத்தியன்' 6/3

★ மிகவும் சிக்கனமானது ★ சக்தி வாய்ந்தது



கிடைக்குமிடம்:
**அக்ரேஸ் லிமிட்டெட்**
59, கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர்கள்:
**ஜெகெம்**
39, பிறிஸ்ட்டல் பில்டிங், 61, யோர்க் வீதி, கொழும்பு 1 ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
Daily at 10-30, 2-30, 4-45, 7-15 & 9-45
NOBODY, BUT "NOBODY" KNOWS THE TROUBLE HE'S IN
HENRY FONDA — TERENCE HILL
in
My Name is Nobody
(Scope—Color)

மனோஹரா A
தினசரி 4 காட்சிகள்
Saint Against Agent OO
Coming soon
The Living Desert

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர்-அசோகன்-நாகேஷ்-ராதிகா-ஜெயச்சந்திரன்
ஸ்ரீமணிக்கம்-டிங்கிரி கனகரத்தினம்-V. R. ஸ்ரீ நடராஜா
ரத்தத்தின் ரத்தமே
(வண்ணக்கலர்)
டைரக்ஷன் : ஜோ தேவ் ஆனந்த்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தொலைபேசி: 466
தினசரி 5 காட்சிகள்
தினசரி: 10-30, 1-30, 4-30, 7-15 10-30
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி
மற்றும்பலர் நடித்த
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணப்படம்)

SANTHI JAFFNA Phone 7642
Daily 10-30, 2-30, 4-45; 7-00 & 9-30 p.m.
MICHAEL SARRAZIN & URSULA ANDRESS In
THE LOVES AND TIMES OF
SCARAMOUCHE
Romance...Suspense...Thrill...Comedy
IN COLOR—MORE SUITED FOR ADULTS
COMING "Shark's Treasure"
—in color—

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜிகணேசன் - எம். ஆர். ராதா நடித்த
பாகப் பிரிவினை

லிடோ (யாழ்நகர்) போன்: 7393
Daily at 10-30 a.m., 2-15, 4-45, 7-15, 9-30 p.m
A STAR IS BORN

REGAL
(Jaffna) Now Showing
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p.m.
A very Funny, Naughty Comedy
REDD FOXX, PEARL BAILEY
In
M. G. M'S
"NORMAN... IS THAT YOU?"
(in color) More Suited for Adults

ராஜா - (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
★ மரிக்கார் ராம்தாஸ் ★ அப்புக்குட்டி ராஜகோபால்
★ உபாலி செல்வசேகரன்
மற்றும் பலர் நடித்த
கோமாளிகள் (புதிய பிரதி)
குறிப்பு:
1978-ம் ஆண்டு எம். ஜி. ஆர். தலைமையில் நடைபெற்ற திரைப்பட விழாவில் சகல நடிக, நடிகைகளும் பங்குபற்றிய செய்திச்சுருளும் காண்பிக்கப்படும்.
எம். ஜி. ஆர், ராஜா படமாளிகைக்கு விஜயம் செய்துள்ளார். முதல் மந்திரியாக, இந்திய திரைப்பட விழாமூலம் உங்கள் நெடுநாள் ஆவலைப் பூர்த்தி செய்யக் காட்சி தருகின்றார்.
அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.


# நாம்செல்லவேண்டிய...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டு நிலையமாகக் கருத வேண்டும்."

இதனைத் தொடர்ந்து திரு அமிர்தலிங்கம் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:- 80 ஆண்டுகள் வாழ்ந்து தமிழ் இனத்திற்கு தம்மை அர்ப்பணித்து, கடைசி மூச்சுவரை தமிழ் இனத்திற்காக வாழ்ந்த தந்தை செல்வாவிற்கு 80 அடி உயரமான நினைவாலயம் நிறுவப்பட்டுள்ளது. கடைசி 30 ஆண்டுகள் அவர் எமது இனத்திற்கு காட்டிய பாதை அழியாத இடம் பெற்றுவிட்டது.

சுதந்திர உணர்ச்சியை ஊட்டி, எங்கள் மத்தியில் உள்ள பாகுபாடுகளைக் களைந்தெடுக்க உழைத்தார்.

"தாழ்த்தப்பட்டவர்கள் என ஒதுக்கப்பட்ட தமிழர்களுக்கு வாழ்வளிக்க, வரலாறு பிறப்பிக்கப் புத்துயிர் பெற்ற இனமாக ஒரு சமுதாயத்தை ஆக்க அரும்பாடுபட்டு உழைத்தார். சாதியினால், சமயத்தினால், பிரதேசத்தினால் வேறுபட்ட, மாறுபட்ட தமிழினத்தை மீட்டெடுத்து, பொத்துவில் முதல் பருத்தித்துறை வரை, மன்னார் முதல் மட்டக்களப்பு வரை, தமிழ் பேசும் மக்கள் ஒரு தாய் மக்கள், ஒரே இனத்தவர் என்ற உறுதிப்பாட்டை நிலைநாட்டினார்.

## தமிழினம் ஒரே அணியில்

"பலதரப்பட்ட அரசியல் கட்சிகளாகப் பிரிந்திருந்த தமிழினத்தை ஒரே இயக்கமாக்க, தன் வாழ்நாளில் இறுதி 5 வருடங்களையும் செலவிட்டார். இறுதியில் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தையும், மற்றும் தலைவர்களையும் தேடிச் சென்று தமிழ்மக்களை ஒரே அணியில் சேர்க்க அரும்பாடுபட்டார். இந்த இலட்சியத்தைக் கொண்டிருந்த அவரை ஒவ்வொரு நாளும் நினைவுபடுத்தும் கலங்கரை விளக்கம் போல் இந்நினைவுச் சின்னம் அமைந்துள்ளது. அவர் மறைந்த இத்தினத்தில் நினைவாலயத்தைத் திறந்து வைக்கிறேன்.

எத்தனையோ நெருக்கடிக்கு மத்தியில் எதிர்ப்புக்கு மத்தியில் எங்களுக்குத் தேவையான ஆட்சியுரிமையைப் பெற இச்சின்னம் உதவுமென்பது உறுதி.

தமிழறிஞர்களில் உயர்ந்தவரான வண. பிதா தனிநாயகம் அடிகளாரைக் கொண்டு இதனைத் திறந்துவைக்கும்படி கேட்டோம். இதனை நானே திறந்து வைக்கவேண்டுமென அவர் கூறினார். அவர் தீர்மானப்படி நான் திறந்து வைக்கிறேன்.

மாலை 6-50 மணிக்கு மக்கள் எழுந்துநின்று அமைதியாக அஞ்சலிசெய்ய, சமயக் குருமார்கள் ஆசி கூற, திரு அமிர்தலிங்கம் ஞாபகார்த்தக் கல்லைத் திரைநீக்கஞ்செய்து வைத்து, நினைவாலயத்தைத் திறந்துவைத்தார்.

இக்கல்லில் பொறிக்கப்பட்டிருந்ததாவது: ஈழத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர், தமிழ்த் தேசிய இனத்தின் தந்தை, தமிழ் ஈழத் தாயகத்தைக் காண உழைத்த தீர்க்கதரிசி உயர்திரு மூதறிஞர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள் இங்கே உறங்குகிறார். தோற்றம்: 31-3-1898, மறைவு: 26-4-1977.

நினைவாலயம் திறந்துவைக்கப்பட்ட பின் மக்கள் மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

இதனைத் தொடர்ந்து நினைவுமலர் வெளியிட்டுவைக்கப்பட்டது.

வண. பிதா தனிநாயகம் அடிகளிடமிருந்து கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் முதல் மலரைப் பெற்றுக்கொண்டார். பின்னர் மக்கள் வரிசையாக வந்து மலர்பெற்றுச் சென்றனர். கோப்பாய் எம். பி. திரு. கதிரவேலுப்பிள்ளை, ஈழவேந்தன் ஆகியோர் மலர் வழங்குவதில் தொண்டர்கள் உதவியுடன் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

தந்தை செல்வாவின் அரும் பெரும் சேவை மலரில் அடங்கியுள்ளதாக வண. பிதா தனிநாயகம் அடிகளார் தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து வாழ்த்துரை நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. நிகழ்ச்சிகள் யாவும் திரைப்படம் பிடிக்கப்பட்டது.

முதலாவதாக திருப்பெருந்திரு நல்லை ஞானசம்பந்தராதீன பரமாச்சாரிய சுவாமிகள் கூறியதாவது: "தந்தை ஈழத் தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல, உலகத் தமிழ்மக்களுக்கெல்லாம் தந்தையாக விளங்கினார். அவர் நேர்மை, உறுதிப்பாடுடன் வாழ்ந்தார். கலங்கரை விளக்கமாக இந்த நினைவாலயம் தமிழினத்திற்கு உதவும்."

பேரருட்திரு வ. தியோகுப்பிள்ளை கூறியதாவது, "மாபெரும் தலைவராக இருந்து அவரின் வழிநடத்தலின் கீழ் ஒரே இயக்கமாக தமிழ்மக்கள் இயங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர் நேர்மையுடனும் துணிவுடனும் அஞ்சாநெஞ்சத்துடனும் வாழ்ந்தார், அவரின் ஞாபகச் சின்னம் தமிழினத்திற்கு கலங்கரை விளக்கமாக இருக்கும் ஒற்றுமையை என்றும் ஞாபகப்படுத்தும்.

அருட்திரு. டி. ஜே. அம்பலவாணர் கூறியதாவது: "இந்நினைவாலயம் தமிழ்மக்கள் காட்டும் நன்றிச் சின்னம். தமிழ் மக்களுக்கு அவர் செய்த பணிகளை இந் நினைவு கூருகிறது. நேரான நிமிர்ந்த மேல்நோக்குடன் அமைந்திருக்கின்றது.

தமிழன் தலைநிமிர்ந்து வாழ அடி அத்திபாரம் தேவைப்படுகிறது. சுதந்திரதாகத்தைத் தந்தை எடுத்து ஊட்டி வைத்தார். அரச சேவையை விரும்பியவர்கள் தமது நாட்டிலே தங்கள் இடத்திலே சேவையாற்ற தடைப்பட்டுள்ளன. மகாத்மாவின் அகிம்சை வழியில் இயக்கத்தை நடத்தினார்.

## தந்தை-அமிர் காலத்தில்

நினைவாலயத்தில் பாதிச் சூரியனை நாம் காணுகிறோம், "அண்ணா" என்று அழைக்கப்படும் திரு. அமிர்தலிங்கம் வளர்ந்து முதிர்ந்து 'தந்தை' எனப் பெயர்பெற்று அழைக்கப்படும் காலத்தில் சூரியன் பூரணமாக காட்சியளிக்கும் என நம்புகிறேன்.

ஆலி ஜனாப் பாஷீர்மௌலானின் பிச்சை கூறியதாவது:- "மறைந்த மாணிக்கம்செல்வாவின் வாழ்க்கையை நினைவாலயம் சுட்டிக்காட்டக்கூடியது. தமிழ் ஈழ தாயகத்தை மீட்டுக்கொள்ள தமிழரின் பாரம்பரிய பூமியை ஆட்சி செலுத்தவேண்டும் என்பதே தந்தை செல்வாவின் தணியாத தாகம், நெஞ்சங்களில் அவர் என்றும் நிலைத்து நிற்பார்.

## கூட்டணித் தலைவர் உரை

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் கூறியதாவது:

"தந்தை செல்வா தமிழ் இனத்திற்குச் செய்த பணி ஒரு வரலாறு. ஒரு சகாப்தம். ஒரு காலகட்டமாகும். தமிழ்மக்களின் அரசியல் இயக்கத்தைச் சுதந்திர இயக்கமாக மகாத்மாவுக்குப் பின் முதன்முதலாக நடத்தினார். மகாத்மா வந்தபின் சுதந்திர தாகம் ஏற்பட்டதுபோல், இங்கு தந்தை செல்வா தோன்றிய பின்னரே சுதந்திர இயக்கம் உருவானது. மகாத்மா ஹிம்சையை எதிர்த்துப் போராடியதுபோல் தந்தை பல களில் தமிழ் சிறையைப் பொறித்துத் தமிழ்மக்களுக்குச் சுதந்திர உணர்ச்சியை ஊட்டிவைத்தார்.

## ஒற்றுமையின் சின்னம்

தமிழினம் பல்வேறு கூறுகளாக வெவ்வேறு கட்சிகளாக பிரிந்து நின்றபோது 1972ம் ஆண்டு ஒரே இயக்கமாக வேண்டுமென்று உறுதிபூண்டு சுயகௌரவத்தையும் விட்டு ஒரே அணியில் திரட்ட அரும்பாடுபட்டு வெற்றிகண்டார். தமிழினத்தை ஒரே அணியில் சேர்த்தார். அந்த ஒற்றுமையின் சின்னந்தான் இது.

காங்கேசன்துறை இடைத் தேர்தலின் மூலம் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவது, இழந்த உரிமையை மீட்பதுதான் முடிவான முடிவென உலகத்திற்கு அறிவித்தார் தந்தை செல்வா."

வானுயர்ந்து நிற்கும் சின்னம் உயர்ந்த லட்சியத்தைக் காட்டுகிறது. ஒரு சுதந்திர நாட்டை சாதிமத பேதமில்லா சமதர்ம சமுதாயத்தை உருவாக்கவேண்டும் என்ற லட்சியத்தை நிறைவேற்றுவதுதான் அவருக்குச் செய்யும் கைமாறாகும்.

இதனைத் தொடர்ந்து நினைவாலயத்திற்கு உழைத்தவர்களுக்கு பொன்னாடைபோர்த்தும் நிகழ்ச்சி ஆரம்பமானது.

யாழ் நகர முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் யாழ் நகரில் மிக உயர்ந்த கட்டடமாக திகழும் தந்தை செல்வாவின் நினைவாலயத்தை திராவிட அமைப்பை - தமிழ் தேசியத்தை பிரதிபலிக்கக் கூடிய விதத்தில் அமைத்த கலைஞர்

(8ம் பக்கம் பார்க்க)


வறன் வசதிகளை .... 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - சாவித்திரி
நடித்த
ஜக்கம்மா

வெஸ்லி மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எஸ். எஸ். ஆர்- விஜயகுமாரி
அல்லி பெற்ற பிள்ளை
(புதிய பிரதி)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
ஜொஜி - ஜெயா....
.... (புதியபிரதி)

மலிவு விற்பனை
தேக்கு மரம்
அரசாங்க மரக்கூட்டுத் தாபனத்தின் பின்வரும் மரக்காலைகளில் தேக்கு மரம் தற்போதைய விற்பனைவிலையிலும் பார்க்க 30% கழிவுடன் உத்தரவுப் பத்திரமின்றி விற்பனை செய்யப்படும். இச்சலுகை 1980-05-17-ந் திகதி வரை மட்டுமே வழங்கப்படும்.
யாழ்ப்பாணம் மரக்காலை
சங்கானை மரக்காலை
பருத்தித்துறை மரக்காலை
பிரதேச முகாமையாளர்,
(வடபிராந்தியம்)
அரசாங்க
மரக் கூட்டுத்
தாபனம்,
இல. 25, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
1980-04-26. (5579)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷார்ப் போட்டோ கொப்பியிங் சேர்விஸ்
(COPYING SERVICE)
சகல விதமான, அச்சு மற்றும் கையெழுத்துப் பத்திரங்களை குறைந்த செலவில், குறுகிய நேரத்தில் இறக்குமதிசெய்யப்பட்ட காகிதத்தில் போட்டோ பிரதி செய்து கொடுக்கப்படும்.
SHARP PHOTO
10, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.
(சுன்னாகம் மக்கள் வங்கி முன்பாக)

ஈழநாடு 50 சதம்
The EELANAADU

# 14 பாடசாலைக்கு 1 ஆசிரியர்

(கொழும்பு)

பட்டிருப்புத் தொகுதியில் ஒரே ஒரு ஆசிரியர் கல்வி கற்பிக்கும் 14 பாடசாலைகள் உள்ளன

இவ்வாறு பிரதிக் கல்வி கல்வியமைச்சர் திரு. வீரவன்னி சமரவீர பாராளுமன்றத்தில் கூறினார்.

பட்டிருப்பு எம். பி. திரு. பூ. கணேசலிங்கத்தின் கேள்வியொன்றுக்கு கடந்த வெள்ளியன்று பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். (இ)

Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...

டில்கா வாச்வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல்மாடி.
404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## புளியங்கூடல் மகாமாரி கும்பாபிஷேகம்

# அருள்வாரி வழங்கும் மகாமாரி

உலகத்து தாயகியாய் விளங்கும் சிவசக்தி செந்தண்மை பூண்டு அடியார்களை வாழச்செய்வதற்கு வேண்டி பீடங்கள் தோறும் எழுந்தருளுகிறாள். அவளுடைய அருட்சக்தியின் பெறுபேறுகளே நல்வாழ்வின் உறுதுணைகளாகும்.

செருந்தைப்பதி புளியங்கூடல் மகாமாரிஅம்பாள் மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி, காஞ்சி காமாட்சி போன்று சப்ததீவுகளுக்கும் சகல நன்மைகளையும் வாரி வழங்குகின்றாள் பலிபீடம் சுத்தி உருவத்தில் புளியங்கூடலுக்கு வைமுத்தர் என்னும் வரம் வாய்ந்த தேவிதாசனால் கொண்டுவரப்பட்ட அன்னையின் அருட் சின்னம் இன்று ஒன்றரை நூற்றாண்டுகள் கழிந்து கன்னி உருவத்திலே முறுவல்பூத்த முகத்தினளாய் காட்சி தருகின்றாள். மகாமாரி

தீவுத் தொகுதியில் கோவில் கொண்டு அருள்பாலிக்கும்மகாமாரி பல்வேறு காலங்களில் தன்னையும் மனிதகுலத்தையும் நலமாக வளர்த்துள்ளாள். அடியார்களின் ஆதரவோடும் இருட்கொடை போடும் சிறப்புற நடத்த பரிபாலனம் காலஞ்சென்ற துரையப்பா அவர்களின் தூயபக்திபோடு பரவலான திருப்பணிகளைக் கண்டது.

திரு. துரையப்பா அவர்களின் ஏகபுத்திரனான செல்வன் து. சிவஞானச்செல்வம் ஆலய பரிபாலனப் பரம்பரையின் பக்குவங்களை வளர்த்து திருப்பணிகளை செய்கின்றார். அவருடைய முயற்சியோடும் அடியார்கள், அன்பர்கள், ஆதரவாளர்களின் துணையோடும் அன்னை மகாமாரி இன்று கும்பாபிஷேகத்தை ஏற்கின்றாள். அவளுடைய அருள் விளக்கத்தை துலக்கும் இராஜ கோபுரத்திற்கும் இன்றே கும்பாபிஷேகம் நிகழ்கின்றது

கும்பத்திலும், பிம்பத்திலும், கோபுரத்திலும் பரவிப் பிரகாசித்துநின்று அருள் வழங்கும் அன்னையின் பெருஞ் சாந்தி விழாவில் பெருவிருப்போடு கலந்துகொள்வோமாக.

— ஈழத்துச் சிவானந்தன்

## வானொலியில் அஞ்சலும் படப்பிடிப்பும்

புளியங்கூடல் மகாமாரி அம்பாள் கோவில் ஆலயமகா கும்பாபிஷேக நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனம் இன்று காலை 8-30 மணி தொடக்கம் 10மணி வரை அஞ்சல் செய்கிறது. தகவல்பகுதியினர் இவ்விழாவை வைத்துப் படமாக்குகின்றனர்.

## பூரண விடுதலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திகதி இளைஞர் பேரவை கூட்டணியுடனான தனது சகல உறவுகளையும் துண்டித்து, தமிழீழ விடுதலை இயக்கமாக தன்னைப் பிரகடனப்படுத்திச் செயல்படும்

● "அந்தமாதம் இடதுசாரித் தொழிற்சங்கங்கள் நடத்தும் தேசிய எதிர்ப்புத்தினத்தில் இணைந்து கொள்வது.

● "அதேசமயம், தொழிற்சங்க இணைப்பு, தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவேண்டுமென்று வற்புறுத்த வேண்டும்,

● "தமிழ் மக்களின் அவசர அவசிய பிரச்சினைகளை முன்வைத்து அரசுக்கு எதிராக தமிழர் கூட்டணி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர வேண்டும்.

● "இதனை விரைவாக நிறைவேற்றும் வகையில் பேரவை பொதுச்சபை, கூட்டணியின் பாராளுமன்றக் குழுவை வலியுறுத்த வேண்டும்.

● "மே தினத்தில் கூட்டணியுடன் சேர்ந்து செயலாற்றுவது.

● "அரசாங்கம் வழங்கும் சமாதான நீதிவான்கள் போன்ற கௌரவப் பதவிகளை ஏற்கக்கூடாது.

● "கூட்டணியின் பொதுச்சபையில் மூன்று எம். பிக்களுக்கு அதிகமாக எம். பிக்கள் இருக்கக் கூடாது.

● "செயற் குழுவில் ஒரு எம். பி. மட்டுமே அங்கம் வகிக்க வேண்டும்."

## அறிவு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிவஞானம் ஆகியோரும் கலந்து கொண்டனர்

திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது; தான் மேற்கொண்ட கருமத்தை நிறைவேற்ற மெய்வருத்தம் பாராது, பசிநோக்காது கண்துஞ்சாது, அவமதிப்பை பொருட்படுத்தாது அமரர் திருச்செல்வம் உழைத்தார். யார் யார் நன்றிகூறவேண்டியவர்களோ அவர்களே அவரை அவமதித்தபோதும் அதை பொருட்படுத்தாது கடமையில் கண்ணாக இருந்தார்" என்று கூறினார்.

நேற்றுமாலை சரியாக 5-55 மணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் திரைநீக்கம்செய்து பலத்த கரகோஷத்துக்கு மத்தியில் சிலையை திறந்துவைத்தார் இதனைத் தொடர்ந்து யாழ். மாநகர முதல்வர் திரு இராசா விஸ்வநாதன், அமரர் திருச்செல்வம் நினைவுக்குழு செயலாளர் திரு க. சச்சிதானந்தன், திரு. கே முத்துலிங்கம் ஆகியோர் சிலைக்கு மாலை சூட்டி அஞ்சலி செலுத்தினர்கள். நினைவுக்குழுத் தலைவர் சட்டத்தரணி இ. பாலசுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அமரர் திருச்செல்வத்தின் சிலையை உருவாக்கிய சிற்பி, ஆசிரியர் சிவப்பிரகாசத்திற்கு யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

தலைமைவகித்த கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், கலாநிதி நீலன் திருச்செல்வத்தை ... பேழையில் வைத்து, பொதுமக்களுக்கு அறிமுகம் செய்து வைத்து தந்தை விட்டுச்சென்ற பணியை தொடர்ந்து செய்யவேண்டுமென்றும், அப்பொறுப்பை ஒப்படைக்கின்றேன் என்றும் கூறினார்

(முழுவிபரம் நாளை வெளிவரும்) (ச)

## தமிழின...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரசுரசரின் பேருமையை உணர்ந்த மேற்கு ஜெர்மனி அரசாங்கம் சுவாமிக்கு முத்திரையை வெளியிட்டுக் கௌரவித்துள்ளது ஈழத்தில் பிறந்த ஆறுமுகநாவலர் பெருமானும், விபுலானந்த அடிகளாரும்கூட தமிழ்நாட்டிற்குச் சென்று அங்கெல்லாம் புகழ் பரப்பியுள்ளனர். அவர்களையெல்லாம் ஒருபடி மிஞ்சிவிட்டார் வண. பிதா தனிநாயகம் அடிகள்.

"உலக அறிஞர்கள் தமிழ் ஆராய்ச்சித் துறையை மதிக்கிறார்கள் என்றால் அப்பெருமையை எமக்குத் தேடித் தந்த பெருமை அடிகளாரையே சாரும்.

"தமிழ் இனத்திற்கு தனித்துவத்தை ஏற்படுத்திய தந்தை செல்வாவின் நினைவு தினத்தில் அடிகளாரைக் கௌரவித்துப் பாராட்டுவது மிகப் பொருத்தமானதே

எல்லாவற்றையும் துறந்து துறவியாக ஆண்டவனிடம் தம்மை அர்ப்பணித்துவிட்டடார் என்று கூறினார். (கொ)

## நாம்...

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

களை வாழ்த்துகிறேன் என்று கூறினார். கட்டிடக் கலைஞர் திரு வி. எஸ். துரைராஜா, ஒப்பந்தகாரர் திரு. மனோகரன், திரு. வெற்றிவேலு, சிற்பி திரு. தில்லையம்பலம் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

செல்வா அறங்காவல் குழு செயலாளர் திரு. வி. தருமலிங்கம், விழாவிற்கு வந்த வாழ்த்துச் செய்திகளை விழா ஆரம்பத்தில் வாசித்தார்.

நல்லாசி கூறி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா வாழ்த்து அனுப்பிருந்தார். கொழும்பு தமிழ் சபை செயலாளர் திரு. கந்தசாமி கொழும்பு மேற்றிராணியார் ஆகியோர் வாழ்த்து அனுப்பிருந்தனர்.

தமிழ் மக்கள் இதயத்தில் திரு. செல்வா என்றென்றும் வாழ்வார்கள் என குருநாகல் பிஷப் விக்கிரமநாயக்கா வாழ்த்து அனுப்பியிருந்தார்.

பண்டிதமணி சி, கணபதிப்பிள்ளை அனுப்பியிருந்த வாழ்த்தில் ஈழத்திருநாட்டில் தமிழ் இனத்தில் ஈடிணையற்ற ஒப்பாரும் மிக்காருமில்லா தலைவர் என அவர் தெரிவித்திருந்தார்.

தந்தை செல்வா நினைவாலய விழா தமிழன் சரித்திரத்தில் இடம்பெறக் கூடியவிழாவாக வரலாற்றில் பொறிக்கப்படக்கூடிய வைபவமாக அமைந்திருந்தது. (கு)

## கருணைமழை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வழிபடும் அடியார்களும் பணிவுடனும் அன்புடனும் கும்பிட கும்பிட மூர்த்தி உருவேறும் உரு ஏறத் திரு ஏறும் என்பர் அந்தணர்கள் பலர் ஒருங்கு கூடி, கும்பங்களிலும், ஓமகுண்டங்களிலும் தெய்வத்தை அமரச்செய்கின்றனர். பின்னர் கும்பங்களிலும், குண்டங்களிலும் உறைந்த தெய்வீக ஆற்றலை மூலமூர்த்தியுடன் கலக்கச் செய்கின்றனர். இதுவே கும்பாபிஷேகத்தின் உட்பொருள். தெய்வீக சக்தியைப் போற்றி வழிபட்டுவர மாதம் மும்மாரி பொழியும்! மாரி மழை தருந்தெய்வம். மழை இறைவியின் கருணைக்கு அறிகுறி. கருணை மழைபெற வேண்டுவார் வருக! மாரியம்மனைத் தொழுக!

"காணும் கனகமும் காரிகையாமே"

— திருமந்திரம்

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆலய ராஜகோபுர கும்பாபிஷேகம் இம்மாதம் 30ம்திகதி காலை நடைபெறவிருக்கிறது.

இவ்வாலய மணிக்கோபுர கும்பாபிஷேகம் கடந்த 21ம் திகதி திங்களன்று நடைபெற்றது மார்த்தாப் பிரமுகர். திரு. எஸ். சின்னத்துரை முதலில் மணியை அடித்து ஆரம்பித்து வைத்தார்.

* * *

நவாலி அட்டகிரி ஸ்ரீவிசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாத சுவாமி தேவஸ்தான புனவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று காலைநடைபெறும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஆதரவுடன் ... யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்குவீதி 68-ம் இலக்க அச்சகத்தில் ஏப்ரல் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under No. QB/88/8/78 The Eelanaadu, Post Box No. 48, Telegram: 'Eelanaadu' Phone: 888.

யாழ். மத்திய கல்லூரி
G. C. E. A L புலமைப் பரீட்சை
பின்வரும் புலமைப்பரிசுகள் G C E A/L 1-ம் வருடத்தில் அனுமதிக்கப்படுபவர்களுக்கு ஒரு போட்டிப் பரீட்சை மூலம் வழங்கப்படும்.
பரீட்சைத் திகதி: 17-5-1980
(1) Rev. C. A சிமித் புலமைப்பரிசில்கள் 3
(2) வைத்திய கலாநிதி வைத்தியநாதன் நடராஜா புலமைப் பரிசில்கள் 2
அலுவலகத்தில் உள்ள படிவங்களில் 6-5-1980 க்கு முன்னர் மனுச்செய்யவும்.
5611 அதிபர்

மக்கினொன் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்
உங்களை
திருச்சிராப்பள்ளி, மதுரை, பம்பாய், கோலாலம்பூர், சிங்கப்பூர், பரிஸ், லண்டன், துபாய், சவூதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல மற்றும்
பாஸ்போட், அமெரிக்கன் டிரவலர்ஸ் செக், உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட், சுற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை
கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துகொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
மக்கினொன் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,
தபால் பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
சௌகரியமாக்குவது எங்களது!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org